
# 1 தமிழ் எழுத்துக்கள்

வட இந்தியாவில் சிந்துநதி பாயும் நிலப் பகுதியைச் சிந்துவெளி என்று சொல்வார்கள். அங்கே மொஹஞ் சொதாரோ என்னும் இடத்தில் நிலத்தைத் தோண்டிப் பார்த்தபோது பல பெரிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

தமிழர்களின் முன்னோர்கள் அங்கெல்லாம் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அந்த இடம் மண்மேடு இட்டுப் புதைந்து போயிற்று. அப்படிப் புதைந்துபோன நகரத்தைத்தான் இப்போது தோண்டிப் பார்த்து ஆராய்ந்தார்கள். அந்த முன்னோர்கள் எப்படி எப்படி வாழ்ந்தார்கள் என்று அதைக்கொண்டு ஆராய்ந்து பார்த்தார்கள். அதன்படி பார்த்தபோது பழங்காலத்தில் தமிழர்கள் எழுதிவந்த எழுத்து எப்படிப்பட்டது என்று தெரிந்தது.



பழங்காலத்தில் தமிழர்கள் சீனர்களைப் போலவே சித்திர எழுத்துக்களை எழுதிவந்தார்கள். மேலே சொன்ன புதைபொருள் ஆராய்ச்சியால் இந்த உண்மை தெரிகிறது. அப்படித் தமிழர்கள் சித்திர எழுத்துக்களை எழுதிவந்த காலம் மிகப் பழைய காலம். ஐயாயிரம் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் அது. அந்தப் பழங்காலத்தில் இந்தப் பெரிய நாடு முழுவதும் தமிழர்களே இருந்து வந்தார்கள். வேறு இனத்தார் யாரும் வந்து குடியேறாத பழங்காலம் அது.

அந்தப் பழைய சித்திர எழுத்து, காலப்போக்கில் பல வகையாக மாறி வந்தது. பொருள்களின் சித்திரங்களான எழுத்துக்கள் மெல்ல மெல்ல மாறி மாறி ஒலிகளின்

அடையாளங்களாக ஆகிவிடும் அல்லவா? அப்படி அவைகள் மாறுவதற்கு எவ்வளவு காலம் ஆயிற்று என்பதையும் இப்போது சொல்ல முடியாது. ஒரு பழைய ஆலமரத்தைப் பார்த்தால், அதனுடைய வளர்ச்சியைப் பற்றி நம்மால் சரியாகத் தெரிந்துகொள்ள முடியவில்லையே. நமக்கு ஒன்றுமே தெரியாத அந்தப் பழைய காலத்து எழுத்துக் களைப் பற்றி எப்படிச் சொல்ல முடியும்?

ஒன்றுமட்டும் நன்றாகத் தெரிகிறது. பழந் தமிழர்களின் சித்திர எழுத்து மாறி அடையாள எழுத்தாக ஏற்பட்ட பிறகே, அதிலிருந்து பிராமி என்னும் பழைய எழுத்து ஏற்பட்டது. அந்தப் பிராமி எழுத்தே நெடுங்காலம் வட இந்தியாவில் இருந்து வந்தது. அதிலும் எவ்வளவோ கலப்பும் மாறுதலும் ஏற்பட்டு வந்தன. அசோகர் என்ற பெரிய அரசரின் காலத்தில் பிராமி எழுத்தே இருந்துவந்தது.

வட இந்தியாவில் பிராமிபோல் தென்னிந்தியாவில் பழங்காலத்தில் இருந்த எழுத்தே பழைய தமிழ் எழுத்து. அந்த எழுத்துக்களையே கல்லில் வெட்டிச் செதுக்கி எழுதவும் பயன்படுத்தினார்கள். அவை வட்டவடிவமாக இருந்தன. அதனால் வட்டெழுத்துக்கள் என்று சொன்னார்கள்.

இதற்குப் பிறகு ஏற்பட்ட மாறுதலைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். வட இந்தியாவில் இருந்த எழுத்தும் ஒலியும் ஒரு வகையாக மாறிவிட்டன. தென்னிந்தியாவில் எழுத்தும் ஒலியும் அவ்வளவாக மாறவில்லை. வட இந்தியாவில் இருந்த பழைய எழுத்து முழுதும் மாறித் தேவநாகரி எழுத்து ஏற்பட்டது. சமஸ்கிருதம் இந்தி ஆகியவைகளை இந்த எழுத்தில்தான் எழுதுகிறார்கள். தென்னிந்தியாவில் வட்டெழுத்து ஓரளவு மாறிப் புது வகையான எழுத்து ஏற்பட்டது. ஒரே குடும்பத்தில் பிறந்த இரண்டு பிள்ளைகள் பிரிந்து வாழ்ந்து வேறு வேறாக மாறியதைப்போல் ஆயிற்று.

இப்போது உள்ள தமிழ் எழுத்து ஏற்பட்டு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளே ஆயின. இந்த எழுத்துக்களில் வளைவுகளும் சுழிவுகளும் மிகுதியாக இருப்பதற்குக் காரணம் என்ன? நம்முடைய முன்னோர்கள் பலகையிலும் காகிதத்திலும் எழுதவில்லை. பனை ஓலையில் இரும்பு எழுத்தாணிகொண்டு எழுதினார்கள். அதில் எழுதும்போது, ஓலை கிழியாமல் இருக்க வேண்டுமானால் இப்படி வளைவுகளும் சுழிகளும் இருந்தால்தான் எழுத முடியும். இப்படித்தான் எழுதப்படும் பொருளுக்கும் எழுதும் கருவிக்கும் தகுந்தபடி எழுத்துமுறையும் அமைந்துவிடும்.

இப்படித் தமிழ் மக்கள் எழுதிவந்த எழுத்துக்களில் வடமொழியின் ஒலிகள் சில இல்லை. அந்த ஒலியெல்லாம் இருந்தால் நல்லது என்று சிலர் கருதினார்கள். அவர்கள் தமிழ் எழுத்துக்களுடன் சிலவற்றைச் சேர்த்துப் புதுவகையான ஒன்றை அமைத்தார்கள். அதுவே கிரந்த எழுத்து என்று சொல்லப்படுவது. ஸ - ஷ - ஹ - ஜ

முதலான எழுத்துக்கள் அதைச் சேர்ந்தவைகளே. சில கல்வெட்டுக்கள் இந்தக் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

தமிழையும் கிரந்த எழுத்தையும் பார்த்தே தெலுங்கு எழுத்து ஏற்பட்டது. மலையாள எழுத்தும் அப்படிப்பட்டதே. கன்னட எழுத்து, தெலுங்கு எழுத்தைப் பார்த்து அமைக்கப்பட்டது. தெலுங்கு எழுத்திலும் வளைவுகள் மிகுதியாக உள்ளன. அவைகளும் பனையோலையில் எழுதி ஏற்பட்ட வளைவுகளே.

தமிழ் ஐயாயிரம் ஆண்டுகளாகவே இலக்கியம் பெற்று வளர்ந்துவிட்ட மொழி. அதனால் எழுத்துக்கள் அடிக்கடி மாற முடியவில்லை. கிரந்த எழுத்து எவ்வளவோ வேகமாகத் தமிழ்நாட்டில் பரவியது. பழைய கோயில்களிலும் வேறு இடங்களிலும் கிரந்த எழுத்திலேயே கல்வெட்டுகள் அமைத்திருக்கிறார்கள். ஆனாலும், இன்று தமிழ்நாட்டில் கிரந்த எழுத்து இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது. காரணம் என்ன? தமிழ் எழுத்து நெடுங்காலமாகப் பண்பட்டு அமைந்து, மாறுதலுக்கு இடந்தரவில்லை. க என்ற எழுத்து ஒன்றே தமிழில் உண்டு. தேவநாகரியிலும் கிரந்த எழுத்திலும் க க க க என்ற நான்கு வகை எழுத்து உண்டு. ஒலியைப் பார்த்தால் க, க என்ற இரு வகையும் தமிழில் உண்டு. இரண்டு ஒலிக்கும் ஒரே எழுத்து பயன்படுகின்றது. கதவு என்று சொல்வதில் க என்று வன்மையாக ஒலிக்கிறோம். நகம் என்று சொல்வதில் க என்று மென்மையாக ஒலிக்கிறோம். இதில் ஒன்றும் தவறு இல்லை. இடையூறும் இல்லை. அதனால்தான் இன்று வரையில் பழைய முறையிலே ஓர் எழுத்தையே பயன்படுத்தி வருகின்றோம்.

இப்படிச் சொல்வதால் தமிழ் எழுத்துமுறையில் ஒருவகை மாறுதல் ஏற்படவில்லை என்று எண்ணக்கூடாது. சித்திர எழுத்து வட்டெழுத்து ஆகி, வட்டெழுத்தும் பிறகு மாறி வளரவில்லையா? அதுபோல் பிற்காலத்திலும் அந்த எழுத்துக்கள் ஓரளவு மாறி வளர்ந்திருக்கின்றன. திருவள்ளுவர் எழுதிய பழைய தமிழ் எழுத்து வேறு. இப்போது நாம் எழுதும் எழுத்து வேறு. திடீரென்று அந்தத் திருவள்ளுவர் இப்போது நம்மிடையே வருவாரானால், நாம் எழுதும் தமிழ் எழுத்து க்கள் சிலவற்றைப் படிக்கத் தெரியாமல் இது ஒரு புதியமொழி என்று எண்ணினாலும் எண்ணுவார். நாம் மரம் என்று எழுதும்போது எப்படி எழுதுகிறோம், முதல் எழுத்தாகிய ‘ம’ எப்படி எழுதுகிறோம்? ட போல் எழுதிப் பிறகு வளைத்து மடக்குகிறோம். திருவள்ளுவர் காலத்தில் ப போல் எழுதி அதனுள்ளே நடுவில் ஒரு புள்ளி இட்டார்கள். நாம் அதை ‘ப்’ என்று படிப்போம். திருவள்ளுவர் நம் எழுத்தைப் பார்த்தால் ‘ம’ எழுத்தை புது எழுத்து என்று எண்ணிப் படிக்கத் தெரியாமல் நிற்பார். அவர் மரம் என்று எழுதினால் நாம் ‘ப்ரப்’ என்று படிப்போம். நாம் மரம் என்று எழுதினால் அவரால் படிக்கவே முடியாது. எண்ணிப் பார்த்தால் இது வேடிக்கையாக இருக்கிறது.

ம என்ற எழுத்து இப்படி வளர்ந்தது போலவே இன்னும் பல எழுத்துக்கள் உருவம் மாறியிருக்கின்றன. தொல்காப்பியம் என்ற பழைய இலக்கண நூலில் எ ஒ

என்ற இரண்டு எழுத்துகளுக்கும் (˙) புள்ளி உண்டு என்று சொல்லியிருக்கிறார். புள்ளி இல்லாவிட்டால் அவற்றை ஏ ஓ என்று பழங்காலத்தில் படிப்பார்கள். நாம் எழு என்று எழுதுவதை அவர்கள் ஏழு என்று படித்தார்கள். அவர்கள் ஏடு என்று எழுதியதை நாம் எடு என்று படிப்போம். இப்படியே ஒ ஓ என்ற இரண்டு எழுத்து களிலும் சிறுசிறு மாறுதல் உண்டு. இவை யாரால் ஏற்பட்டன? முந்நூறு ஆண்டு களுக்கு முன்னே பெஸ்கி என்ற பாதிரியார் ஒருவர் இத்தாலி தேசத்திலிருந்து இங்கே வந்தார். அவர் தமிழ் கற்றுக்கொண்டார். வீரமா முனிவர் என்று தமிழ்ப் பெயரும் வைத்துக்கொண்டார். அவர் செய்த மாறுதலால் தான் எ ஏ ஒ ஓ என்று இப்போது உள்ள உருவங்கள் ஏற்பட்டன.

ஐ ஔ என்ற இரண்டு எழுத்துக்களும் மிகப் பழங்காலத்தில் இல்லை. அவைகள் பிறகு ஏற்பட்டவை. இவ்வாறு காலப்போக்கில் சிற்சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஆகவே எழுத்துக்கள் எல்லாம் படிப்படியாக ஏற்பட்டு வளர்ந்து வந்தவைகளே. பாட்டும் வசனமும் ஆகிய இலக்கியம் எழுதி வைக்கும் முறை ஏற்பட்ட பிறகுதான் அந்த வளர்ச்சி நின்றுவிடுகிறது.

எழுத்துக்கள் வளர்ந்தாலும் வளராவிட்டாலும், மாறினாலும் மாறாவிட் டாலும், ஒலிகள் வளர்ந்து வளர்ந்து பெருகிவிடுகின்றன. ஆனால் அவைகள் எல்லாவற்றையும் தனித்தனியே குறிப்பதற்குப் போதுமான அடையாள எழுத்துக்கள் இருப்பதில்லை. தமிழிலும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. உலகத்தில் உள்ள பேச்சு மொழிகள் எல்லாவற்றிலும் இந்த நிலைமை உண்டு. எழுத்துமுறை என்பது மொழிக்கு ஒரு கருவி. அது குறையற்றதாக இருப்பது அருமை. அது கூடியவரையில் பயன்பட்டால் போதும். தமிழ் எழுத்துமுறை அந்த வகையில் போதுமான பயன்தருவதாக இருக்கிறது. கூடிய வரையில் நன்றாகவும் அமைந்திருக்கிறது.

**டாக்டர் மு. வரதராசன்**

**பயிற்சி**

1. மிகப் பழங்காலத் தமிழர் பயன்படுத்திய எழுத்துக்கள் பற்றிய தகவல்களை எவ்வாறு அறிய முடிந்தது?
2. பழங்காலத் தமிழர் பயன்படுத்திய எழுத்து எவ்வாறு அழைக்கப்படும்?
3. தொல்காப்பியர் காலத்தில் இருந்த எழுத்து வகைகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக.
4. வீரமா முனிவரின் எழுத்துச் சீர்திருத்தத்தை விளக்குக.
5. பிற்காலத்தில் நடைமுறைக்கு வந்த எழுத்துச் சீர்திருத்தத்தினைக் குறிப்பிடுக.

# வாக்கியங்கள்
## (வாக்கிய வகை அமைப்பு அடிப்படையில்)

***பின்வரும் வாக்கியங்களைக் கவனமாக வாசியுங்கள்.***

*அ.* *கவிமணி தமிழிசையில் தணியாத பற்றுடையவர்.*

*ஆ.* *கவிமணியின் பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தவை.*

*இ.* *இயேசு பிரான் 'குழந்தைகள் போன்றவர்களே இறைவனடிக்குத் தகுதியுடையவர்கள்' என்று கூறுகின்றார்.*

*ஈ.* *பாரதிதாசன் பாட்டுகளில் விழுமிய கற்பனையும் உண்டு; வேகமான உணர்ச்சியும் உண்டு; பழந்தமிழ் மரபும் உண்டு; புத்துலகச் சிந்தனையும் உண்டு.*

*உ.* *பாரதிதாசன் 'ஆயிரம் பெண்கள் நீரில் ஆர்ப்பாட்டம் செய்வது போலும் பூக்கள்' என அழகுற குறிப்பிடுகின்றார்.*

*ஊ.* *நீ கவனமாகப் படித்தால் பரீட்சையில் சித்தி பெறுவாய்.*

***தரப்பட்ட வாக்கியங்களை வாசித்த பின்னர் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.***

*அ.* *இவ்வாக்கியங்களின் அமைப்பில் காணப்படும் வேறுபாடுகள் எவையெனக் கூறுங்கள்.*

*ஆ.* *இவ் வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் எழுவாய், பயனிலைகளை இனங்காண்க.*

**சொற்கள் தனித்து நின்று அல்லது தொடர்ந்து வந்து கருத்தைத் தந்து முற்றுப் பெற்று நிற்குமாயின் அது வாக்கியம் எனப்படும்.**

*வாக்கியங்களை அமைப்பு அடிப்படையில் பின்வருமாறு பாகுபடுத்தலாம்*

1. *தனி வாக்கியம்*
2. *கூட்டு வாக்கியம்*
3. *கலப்பு வாக்கியம்*

## தனி வாக்கியம்

மேலே தரப்பட்ட வாக்கியங்களில் முதலாவது வாக்கியத்தை அவதானியுங்கள்.

கவிமணி தமிழிசையில் தணியாத பற்றுடையவர்.

- இவ்வாக்கியத்தின் எழுவாய் - கவிமணி
- இவ்வாக்கியத்தின் பயனிலை - பற்றுடையவர்

**மேலுள்ள வாக்கியம் ஓர் எழுவாயையும் அதனது ஒரு செயலையும் கூறி முற்றுப் பெற்றுள்ளது. இவ்வாறு ஓர் எழுவாயையும் பயனிலையையும் கொண்டமைந்த வாக்கியங்கள் தனிவாக்கியங்கள் எனப்படும்.**

உதாரணங்கள்:-

அ. மாலன் ஓவியம் வரைந்தான்.

ஆ. விபுலானந்தர் யாழ்நூலை இயற்றினார்.

இ. அகலிகை மீண்டும் கல்லானாள்.

## கூட்டு வாக்கியம்

தரப்பட்ட வாக்கியங்களை அவதானியுங்கள்.

அ. கவிமணியின் பாடல்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தவை.

ஆ. மேகங் கறுக்குது; மின்னல் மின்னுது; சாரல் அடிக்குது; மழை வரப்போகுது.

முதலாம் வாக்கியத்தில்

கவிமணியின் பாடல்கள் எளிமை நிறைந்தவை
கவிமணியின் பாடல்கள் இனிமை நிறைந்தவை

என்னும் இரு சமநிலைத்தொடர்கள் இணைந்து ஒரு வாக்கியமாகியுள்ளது.

இரண்டாம் வாக்கியத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட சமநிலைத்தொடர்கள் வந்துள்ளன.

ஒரு தொடரில் மற்றொரு தொடர் சார்ந்து இருக்காது, தனித்தனி நிகழ்வுகளைக் கூறும் தொடர்களே சமநிலைத் தொடர்களாகும். அவற்றுக்கிடையே வினைகள் சமநிலையாக காணப்படும்.

- மேகங் கறுப்பதால் மழை வரப் போகிறது.
- மின்னல் மின்னுவதால் மழை வரப் போகிறது.
- சாரல் அடிப்பதனால் மழை வரப் போகிறது.

**இவை யாவும் சமநிலையான தொடர்களாகும். சமநிலைத்தொடர்களால் இணைக்கப்படும் வாக்கியமே கூட்டுவாக்கியம் ஆகும்.**

*உதாரணங்கள்:-*

*அ.* *இராவணனும் மண்டோதரியும் சிறந்த சிவபக்தர்கள்.*
*(உதாரணம் : இராவணன் சிவபக்தன்; மண்டோதரி சிவபக்தை)*

*ஆ.* *யூதாஸ் இயேசுவின் கூடவேயிருந்தானாயினும் அவரைக் காட்டிக் கொடுத்தான்.*

*இ.* *முஹம்மது நபியின் வார்த்தைகள் உத்தமமானவை; சத்தியம் மிக்கவை; மோட்சத்தையும் அளிப்பவை.*

**கூட்டுவாக்கியத்தின் அமைப்பு.**

*சமநிலைத்தொடர்களை இணைத்து கூட்டு வாக்கியங்களை ஆக்கும் பொழுது,*

*உம்*
*அல்லது*
*ஆ*
*ஆனால்*
*ஆகவே*

*முதலிய இணைப்பிடைச் சொற்களும் வினையெச்சங்களும் பயன்படுத்தப்படுகின்றன.*

*உதாரணம்:-*

*1.* **உம்**
*இராமன் வணங்கினான்*
*சீதை வணங்கினாள்*
*இராமனும் சீதையும் வணங்கினார்கள்*

*2.* **அல்லது**
*நான் பாடுவேன்*
*நான் பேசுவேன்*
*நான் பாடுவேன் அல்லது பேசுவேன்*

*3.* **ஆ**
*இராமன் மன்னிப்பானா?*
*இராமன் மன்னிக்கமாட்டானா?*
*இராமன் மன்னிப்பானா? மன்னிக்கமாட்டானா?*

*4.* **ஆனால்**
*இராதா கறுப்பு நிறங்கொண்டவள்*
*இராதா அழகானவள்*
*இராதா கறுப்பு நிறமானவள் ஆனால் அழகானவள்*

5. **ஆகவே**

வானிலை சீரற்றுக் காணப்படுகிறது
மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள்
வானிலை சீரற்றுக் காணப்படுகிறது ஆகவே மீனவர்கள் கடலுக்குச் செல்ல மாட்டார்கள்.

6. **செய்து எச்சம்**

இராமன் காட்டுக்குச் சென்றான்
இராமன் மானைப் பிடித்தான்
இராமன் காட்டுக்குச் சென்று மானைப் பிடித்தான்

7. **செய்ய எச்சம்**

வதனி பாடினாள்
மேகலா ஆடினாள்
வதனி பாட மேகலா ஆடினாள்.

## கலப்பு வாக்கியம்

கீழே தரப்பட்ட இவ் வாக்கியங்களை அவதானியுங்கள்.

- இயேசுபிரான் 'குழந்தைகள் போன்றவர்களே இறைவனடிக்குத் தகுதியுடையவர்கள்' என்று அறுதியிட்டுக் கூறுகின்றார் .
- பாரதிதாசன் 'ஆயிரம் பெண்கள் நீரில் ஆர்ப்பாட்டம் செய்வது போலும் பூக்கள்' என அழகுறக் குறிப்பிடுகின்றார் .
- நீ கவனமாகப் படித்தால் பரீட்சையில் சித்திபெறுவாய்.

அ. குழந்தைகள் போன்றவர்களே இறைவனடிக்குத் தகுதியுடையவர்கள் - சார்புத் தொடர்.
இயேசு பிரான் அறுதியிட்டுக் கூறுகிறார் - தலைமைத்தொடர்.

ஆ. பாரதிதாசன் அழகுறக் குறிப்பிடுகிறார் - தலைமைத் தொடர்
ஆயிரம் பெண்கள் நீரில் ஆர்ப்பாட்டம் செய்வது போலும் பூக்கள் - சார்புத் தொடர்.

இ. நீ பரீட்சையில் சித்திபெறுவாய் - தலைமைத்தொடர் .
நீ கவனமாகப் படித்தால் - (எச்சத்தொடர் ) சார்புத்தொடர்.

இவ்வாறு ஒரு தலைமைத் தொடரையும் ஒன்றோ பலவோவான சார்புத் தொடர்களையும் கொண்டமையும் வாக்கியம் **கலப்பு வாக்கியம் ஆகும்.**

உதாரணம்:-

அ. 'சுதந்திர இந்தியாவே எனது நோக்கம்' என காந்தியடிகள் கூறினார்.

ஆ. வானிலை சீரில்லை என்ற அச்சம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

**கலப்பு வாக்கியத்தின் அமைப்பு**

எச்ச வாக்கியத் தொடர்களாலும் நிரப்பித்தொடர்களாலும் கலப்பு வாக்கியங்கள் ஆக்கப்படுகின்றன.

சுதந்திர இந்தியாவே எனது நோக்கம் என காந்தியடிகள் கூறினார் .
சுதந்திர இந்தியாவே எனது நோக்கம் - சார்புத்தொடர்
என - நிரப்பித் தொடர்
காந்தியடிகள் கூறினார் - தலைமைத்தொடர்

என்று, என்பது, என்ற முதலான இடைச்சொற்களே நிரப்பித்தொடர்கள் எனப்படுகின்றன.

நீ கவனமாகப் படித்தால் நீ பரீட்சையில் சித்தியடைவாய்

- நீ பரீட்சையில் சித்தியடைவாய் - தலைமைத்தொடர்
- நீ கவனமாகப்படித்தால் - எச்சத்தொடர்

செய்ய, செய்து, செய்தால், போன்ற எச்சத்தொடர்களோடு பெயரெச்சத் தொடர்களாலும் கலப்பு வாக்கியங்கள் ஆக்கப்படுகின்றன.

## பயிற்சி

**தனிவாக்கியம்**

1. தனி வாக்கியங்களுக்கு ஐந்து உதாரணங்கள் எழுதுக.

**கூட்டு வாக்கியம்**

2 குகனும் இராமனும் படகில் ஏறினர்.
இவ்வாக்கியத்தில் காணப்படும் சமநிலை வாக்கியத் தொடர்கள் எவை?

3. இரவீந்திரநாத் தாகூர் இயற்றிய தேசிய கீதத்தை இந்தியர்கள் பாடினர்.
இவ்வாக்கியத்தைத் தனிவாக்கியமாக்குக.

4. கூட்டு வாக்கியங்களுக்கு ஐந்து உதாரணம் தருக.

5. பின்வரும் இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி கூட்டுவாக்கியங்கள் எழுதுக.

உம் ஆ ஆகவே
அல்லது ஆனால்

6. கூட்டு வாக்கியங்களை ஆக்குவதில் செய்து எச்சமும் செய்ய எச்சமும் பயன்படுத்தப்படும் விதத்திற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

7. இவ்விரு தனி வாக்கியங்களையும் கூட்டு வாக்கியமாக்குக.

குயில் கறுப்பு நிறப் பறவை
குயில் இனிமையாகப்பாடும் பறவை

**கலப்பு வாக்கியம்**

1. கலப்பு வாக்கியத்திற்கு இரண்டு உதாரணந் தருக.

2. பின்வரும் வகையிலான கலப்பு வாக்கியத்திற்கு இவ்விரண்டு உதாரணந் தருக.

- நிரப்பித் தொடர்
- எச்சவாக்கியத் தொடர்

# எழுத்துக்களின் ஒலி வேறுபாடு (மாற்றொலியன்கள்)

தமிழில் வல்லின மெய் எழுத்துக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளைக் கொண்டு அமைந்துள்ளன. இவ்வாறு இந்த எழுத்துக்கள் வெவ்வேறு ஒலிகளைக் கொண்டு அமைவதை மாற்றொலிப்பு என்பர். இந்த மாற்றொலிப்புக்கள் சொற்களில் அவ்வெழுத்துக்கள் அமைந்துள்ள சார்பிடம் நோக்கியே வேறுபடுகின்றன.

***கடல்*** ***பங்கம்*** ***பாகம்***

மேலுள்ள மூன்று சொற்களும் 'க'கரம் வேறுபட்டு ஒலிப்பதை ஒலித்துப் பார்த்து அறிந்துகொள்ளலாம்.

***கடல், கப்பல், கதவு*** - இங்கு 'க' எனும் எழுத்து k போன்று ஒலிக்கின்றது.

***தங்கம், மங்கை, தீங்கு*** - இங்கு 'க' எனும் எழுத்து g போன்று அழுத்தமாக ஒலிக்கின்றது.

***சுகம், மேகம், தேகம்*** - இங்கு 'க' எனும் எழுத்து h போன்று மென்மையாக ஒலிக்கின்றது.

மேலும் ***ச, ட, த, ப, ற*** போன்ற எழுத்துக்களும் இவ்வாறு மாற்றொலிப்புக்களை உடையன.

***ச – பசை – பச்சை –*** இங்கு பசை எனும் சொல்லில் 'சை' ஒலி s ஒலி போலவும், 'பச்சை' எனும் சொல்லில் ch ஒலி போலவும் மாற்றாலிப்பு கொண்டு ஒலிக்கின்றது.

***ற – அறம் – அற்றம் –*** இங்கு ற என்ற இரண்டு சொற்களிலும் வேறுபாடு ஒலிக்கின்றது.

இவை போல ***ட, த, ப*** எனும் வல்லின எழுத்துக்கள் மாற்றொலி பெற்று ஒலிப்பதை ஒலித்துப் பார்த்துக் கலந்துரையாடுங்கள்.

# மொழிவளம்

மாணாக்கர் மொழித்திறனைப் பெற்றுக் கொள்வதற்கு சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். சொல்வளத்தைப் பெருக்கினால்தான் ஆக்கத்திறனைப் பெறுவர். சொல்வளத்தில் ஒத்த கருத்துச் சொற்கள், எதிர்க் கருத்துச் சொற்கள், எதிர் பாற் சொற்கள், ஒரு சொல் பல பொருள், ஒரு பொருள் பல சொல் போன்றவை முக்கியமானவையாகும். இங்கு மொழி வளத்தைப் பெருக்குவதற்காக தரப்பட்ட சொற்களைப் பிழையின்றி கற்று ஆக்கத்திறனைப் பெறுங்கள்.

## ஒத்த கருத்துச் சொற்கள்

1. அங்காடி - சந்தை
2. அகதி - கதியற்றவன்
3. அச்சம் - பயம்
4. அஞ்சலி - வணக்கம்
5. அடவி - காடு
6. அடிசில் - உணவு
7. அணங்கு - தெய்வப் பெண்
8. அண்மை - சமீபம்
9. அதரம் - உதடு
10. அந்தம் - முடிவு
11. அக்கினி - நெருப்பு
12. அழகு - எழில்
13. அபாயம் - ஆபத்து
14. அப்பு - நீர்
15. அமர் - போர்
16. அம்புயம் - தாமரை
17. அலுவல் - வேலை
18. அவனி - பூமி
19. அறம் - தருமம்
20. அறிவாளி - அறிஞர்
21. அன்னம் - சோறு
22. ஆசை - விருப்பம்
23. ஆவி - உயிர்
24. இடுக்கண் - துன்பம்
25. இரை - உணவு
26. இறப்பு - மரணம்
27. இறுதி - முடிவு
28. ஈகை - கொடை
29. அமைதி - அடக்கம்

## எதிர்க் கருத்துச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1. அடி | - | முடி |
| 2. அண்மை | - | சேய்மை |
| 3. அந்தம் | - | ஆதி |
| 4. அமைதி | - | குழப்பம் |
| 5. பௌர்ணமி | - | அமாவாசை |
| 6. அறம் | - | மறம் |
| 7. அன்பு | - | வன்பு |
| 8. ஆக்கம் | - | கேடு |
| 9. ஆக்கல் | - | அழித்தல் |
| 10. ஆசை | - | நிராசை |
| 11. ஆத்திகன் | - | நாத்திகன் |
| 12. ஆதரவு | - | அநாதரவு |
| 13. ஆரம்பம் | - | முடிவு |
| 14. இசை | - | வசை |
| 15. இணக்கம் | - | பிணக்கம் |
| 16. இணைந்து | - | தனித்து |
| 17. இம்மை | - | மறுமை |
| 18. இயற்கை | - | செயற்கை |
| 19. இளமை | - | முதுமை |
| 20. இன்சொல் | - | வன்சொல் |
| 21. ஈரம் | - | வரட்சி |
| 22. உயர்வு | - | தாழ்வு |
| 23. காலம் | - | அகாலம் |
| 24. கனவு | - | நனவு |
| 25. கலக்கம் | - | தெளிவு |
| 26. எளிது | - | அரிது |
| 27. ஏற்றம் | - | இறக்கம் |
| 28. ஏறு | - | இறங்கு |
| 29. காய்தல் | - | உவத்தல் |
| 30. கதி | - | நிர்க்கதி |
| 31. குறை | - | நிறை |
| 32. சாவு | - | வாழ்வு |
| 33. புராதனம் | - | நவீனம் |
| 34. நம்பிக்கை | - | அவநம்பிக்கை |
| 35. நிறைவு | - | குறைவு |
| 36. நீதி | - | அநீதி |
| 37. சூடு | - | குளிர் |

38. வரவு - செலவு
39. சுத்தம் - அசுத்தம்
40. வாதி - பிரதிவாதி
41. செங்கோல் - கொடுங்கோல்
42. குறுக்கு - நெடுக்கு
43. ஒற்றை - இரட்டை
44. ஏற்றுமதி - இறக்குமதி
45. ஞாபகம் - மறதி
46. காய் - கனி
47. உறவு - பகை
48. வினா - விடை
49. உள்நாடு - வெளிநாடு

## எதிர்ப்பாற் சொற்கள்

1. அண்ணா - அக்காள்
2. அப்பன் - அம்மை
3. அரக்கன் - அரக்கி
4. அழகன் - அழகி
5. ஆசிரியன் - ஆசிரியை
6. இடையன் - இடைச்சி
7. இறைவன் - இறைவி
8. உத்தமன் - உத்தமி
9. உழவன் - உழத்தி
10. எசமான் - எசமானி
11. ஐயன் - ஐயை
12. ஒருவன் - ஒருத்தி
13. கணவன் - மனைவி
14. காவற்காரன் - காவற்காரி
15. கிழவன் - கிழவி
16. குருடன் - குருடி
17. சமையல்காரன் - சமையல்காரி
18. கூனன் - கூனி
19. செல்வன் - செல்வி
20. தாதன் - தாதி
21. தந்தை - தாய்
22. தம்பி - தங்கை
23. தமையன் - தமக்கை

| | | |
|---|---|---|
| 24. தலைவன் | - | தலைவி |
| 25. பாணன் | - | பாடினி |
| 26. வேடன் | - | வேடுவிச்சி |
| 27. வீரன் | - | வீராங்கனை |
| 28. பைத்தியக்காரன் | - | பைத்தியக்காரி |
| 29. பூட்டன் | - | பூட்டி |
| 30. வீட்டுக்காரன் | - | வீட்டுக்காரி |
| 31. தேவன் | - | தேவி |
| 32. அரசன் | - | அரசி |
| 33. பிரான் | - | பிராட்டி |
| 34. பொன்னன் | - | பொன்னி |
| 35. புத்திரன் | - | புத்திரி |
| 36. பாங்கன் | - | பாங்கி |
| 37. குரு | - | குருபத்தினி |
| 38. பண்டிதன் | - | பண்டிதை |
| 39. நடிகன் | - | நடிகை |
| 40. மருத்துவன் | - | மருத்துவிச்சி |
| 41. பணக்காரன் | - | பணக்காரி |

## கட்டுரையாக்கம்

ஏதாவதொரு தலைப்பில் முறைப்படி ஒழுங்காக ஆக்கமுறையில் எழுதுதல் கட்டுரையாகக் கருதப்படும். உரைநடை வளர்ச்சியையடைந்த பின்னர் கட்டுரை எழுதுதல் தனித்துறையாக வளர்ந்துள்ளது.

ஒரு மொழியைப் பயில்வதன் முக்கிய நோக்கம் ஒருவர் தமது கருத்தைத் தெளிவாகவும் நுட்பமாகவும் கூறுவதும், பிறர் கூறுவதை விளங்கிக்கொள்வதுமாகும். இவ்வகையில் கருத்துக்களை ஒழுங்காகவும், தெளிவாகவும் கோவைப்படவும் கூறுதல் கட்டுரையினுடைய முக்கிய இயல்பாகும்.

## கட்டுரையின் அமைப்பு

கட்டுரையானது ஒரு விடயம் பற்றிய பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது என்பது நீங்கள் அறிந்ததே.

கட்டுரையை வாசகர்கள் சலிப்பின்றி ஆர்வத்துடன் வாசிப்பதற்கு, அதன் மூலம் பயனுள்ள தகவல்களைப் பெறுவதற்கும் அது ஒருவித ஒழுங்குமுறையில் அமைவது அவசியமாகும். கட்டுரையின் அமைப்பை எடுத்துநோக்குவோமாயின் அது மூன்று பிரதான உறுப்புக்களைக் கொண்டமைவதைக் காணலாம்.

1. முகவுரை
2. உடல்
3. முடிவுரை

### முகவுரை

எழுதப்போகும் விடயத்தைப் பற்றிய ஓர் அறிமுகமே முகவுரை எனப்படும். அதாவது எழுதப்போகும் விடயம் என்னவென்பது பற்றி அறிவிப்பது முகவுரையாகும். விடயத்தின் முக்கியத்துவமும், விடயம் பற்றிய வினாக்களும் முகவுரையாக அமையலாம்.

### உடல்

உடல் என்ற பகுதி கட்டுரையின் பெரும்பகுதியாகவும், உயிர்நாடியாகவும் அமையும். எடுத்துக்கொண்ட விடயத்தின் பல்வேறு அம்சங்களையும் வெவ்வேறாக விளக்கி, அதேவேளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திப் படிமுறை வளர்ச்சியில் கருத்துக்களை நிரற்படுத்தி எழுதப்படும் பகுதியை உடல் எனலாம். கட்டுரையின் பெறுமானம், பயன், விளைவு என்பன இந்த உடலைப் பொறுத்தே அமையும்.

### முடிவுரை

முடிவுரை என்பது எழுதப்பட்ட அம்சங்களின் ஒரு தொகுப்பாகும். கட்டுரையில் பொதிந்துள்ள பிரதான அம்சங்கள் முடிவுரையில் தொகுத்து வழங்கப்படும். கட்டுரை ஒன்றின் முடிவிலேயே வாசகரின் அபிப்பிராயம் தீர்மானிக்கப்படுவதால் முடிவுரைப் பகுதி திட்டவட்டமானதாகவும் தெளிவாகவும் இருத்தல் சிறப்புடையது. கட்டுரையின் பிரச்சினைகளையும் முடிவுரையாக அமைக்கலாம்.

## கட்டுரை எழுதும் முறை

கட்டுரை கருத்துப் பரிமாற்றத்துக்கான ஓர் ஊடகமாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். கட்டுரை எழுதலின் பல்வேறு நோக்கங்களில் வாசகர்களைத் திருப்திப்படுத்துவதும் ஒன்று. எனவே கட்டுரை ஒன்று சிறப்பான முறையில் அமைய வேண்டுமானால் அது எழுதப்பட வேண்டிய முறைகள் பற்றி அறிதலும் அவசியமாகும். கட்டுரை எழுதுதலில்

1. திட்டமிடுதல்
2. வடிவமைத்தல்

என்பன கட்டுரை எழுதுவதற்கான இரண்டு படிகளாகும். இனி, இதனை நோக்குவோம்.

### திட்டமிடல்

எழுதப்படும் கட்டுரை எவ்வாறு அமைய வேண்டுமென்பதை முன்கூட்டியே தீர்மானிப்பது திட்டமிடுதல் எனப்படும். இதன் அடிப்படையிலேயே கட்டுரைக்கான சட்டகம் தயாரிக்கப்படுகின்றது. திட்டமிடுதல் பல்வேறு செயற்பாடுகளைக் கொண்டது. அதாவது,

1. எழுதப்படும் விடயத்தைத் தெரிவுசெய்தல்.
2. எழுதப்போகும் விடயத்தின் பல்வேறு அம்சங்களை இனங்காணல்.
3. ஒழுங்குபடுத்தல்.
4. யாவற்றையும் மனக் கண்ணிலே நிலைநிறுத்தல்.
5. சட்டகத்தை அமைத்தல்.

### வடிவமைத்தல்

சட்டகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட அம்சங்களை எவ்வாறு எழுதுதல் வேண்டும் என்பதையே வடிவமைத்தல் என்று கூறலாம். வடிவமைத்தலில் கவனிக்க வேண்டிய அம்சங்கள்..

1. எளிமையாகவும் தெளிவாகவும் சகலருக்கும் விளங்கும் வகையில் எழுதப்படுதல் வேண்டும்.
2. கையாளப்படும் மொழிநடை பின்வருமாறு அமைதல் வேண்டும்.

| மொழிநடைப் பண்புகள் | இலக்கிய நடை | அறிவியல் நடை |
|---|---|---|
| உணர்ச்சிச் செறிவு | அதிகம் | குறைவு |
| சொல் அலங்காரம் | அதிகம் | இல்லை |
| கற்பனை | அதிகம் | இல்லை |
| உட்பொருள் மறை பொருள் | அதிகம் | இல்லை |
| தர்க்க முறைமை | குறைவு | அதிகம் |
| பகுப்பாய்வு | இல்லை | அதிகம் |
| நேர்பொருள் | குறைவு | அதிகம் |
| கலைச்சொல் பயன்பாடு | குறைவு | அதிகம் |

3. எழுத்துத் தெளிவும் குறியீடுகளை அனுசரித்தலும்
4. அம்சங்களைப் பந்தி பிரித்தெழுதலும் பந்திகளுக்கிடையே தொடர்பைப் பேணுதலும்

**பின்வரும் அம்சங்கள் சிறப்பான பந்தியாக்கத்திற்குத் துணை புரிவனவாகும்.**

அ. பந்தியின் மையக் கருத்து கட்டுரையின் தலைமைக் கருத்தின் ஒரு கூறாக அமைதல் வேண்டும்.
ஆ. பந்தியின் மையக் கருத்தினைத் தெரிந்து அதனை வலியுறுத்தியே பந்தி ஆக்கப்படுதல் வேண்டும்.
இ. இன்ன பொருள் பற்றித்தான் இப்பந்தி விளக்குகின்றது என்பதை வாசகர்கள் எடுத்த எடுப்பிலேயே இனங்கண்டு உணரக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.
ஈ. பந்திகளுக்கிடையில் தொடர்பும் படிமுறை வளர்ச்சியும் காணப்படுதல் வேண்டும்.
உ. ஒவ்வொரு பந்தியை எழுதியதும் அதனை வாசித்துச் சீராக்கம் செய்தல் வேண்டும்.

இவ்வடிப்படைகளில் பந்திகளை அமைக்குமிடத்து கட்டுரையின் விடயக் கூறுகளைச் செவ்வனே விளக்குவதற்கும் கட்டுரையின் கட்டுக்கோப்பைப் பொருத்தமுற அமைப்பதற்கும் வாய்ப்பேற்படுகின்றது.

வாசகர்களைக் கவர வேண்டுமெனில் விடயப் பரப்புகளைத் தெளிவுறக் கூறுவதற்கு மேற்குறிப்பிட்டவாறு சிறந்த மொழிநடையும் தர்க்கரீதியாக எடுத்துக்காட்டும் ஆற்றலும், தெளிவான எழுத்தும் அவசியம்.

**கட்டுரையில் அமைய வேண்டியவை**

1. சுருக்கமாவும் விளக்கமாகவும் கூறுதல்.
2. வாசிப்பவருக்கு இன்பம் தருதல்.
3. பொருத்தமான சொற்களைக் கையாளுதல்.
4. ஆழ்ந்த கருத்துக்களை உடையதாக இருத்தல்.
5. பந்திகளை ஒழுங்குற அமைத்தல்.
6. சிறந்த பயன் தருதல்.
7. எல்லோருக்கும் விளங்கக்கூடிய உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குதல்.
8. பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தல்.

**கட்டுரையில் தவிர்க்கப்பட வேண்டியவை**

1. பொருளை விளக்கமின்றிக் கூறுதல்.
2. அளவுக்கதிகமான சொற்களில் கூறுதல்.
3. விடயங்களை மீண்டும் மீண்டும் கூறுதல்.
4. குற்றமுள்ள சொற்களைச் சேர்த்தல்.
5. சந்தேகம் ஏற்படக் கூறுதல்.
6. முரண்படக் கூறுதல்.
7. பொருத்தமில்லாத வெற்றுச் சொற்கள் இடம்பெறுதல்.
8. கூறவந்த பொருளை விட்டு வேறொரு பொருளை விரித்துக் கூறுதல்.
9. சொல், பொருள் என்பன நலிவடைந்து செல்லுதல்.
10. பயனில்லாத சொற்கள் காணப்படுதல்.

**பயிற்சி**

1. ஆசிரியர்களால் வழங்கப்படும் தலைப்புக்கள்/ தலைப்பை விளக்கும் குறிப்புக்கள் என்பவற்றுக்கு கட்டுரை எழுதுவதற்கான சட்டகம் அமைக்குக.

2. இத்தகைய தலைப்புக்கள் சிலவற்றைத் தெரிந்து கட்டுரை எழுதுக.